1971 ஜூலை 17]

3. நடைமுறைக் கேள்வி

ஒரு வெட்டுத் தீர்மானத்தில் மறைமுகக் குற்றச்சாட்டு இருப்பதாகக் கூறப்பட்டது குறித்து.

THIRU N. GANAPATHY : Mr. Speaker, Sir, on a point of order. The cut motion moved by Dr. Hande makes some insinuation against the police, as if they are acting partially now towards some political parties. I therefore request that it should not be allowed.

DR. H. V. HANDE : May I submit, Sir, on the point of order raised that there is absolutely no insinuation.........

MR. SPEAKER : I will answer it. It is not for you to answer. The cut motion reads : "To discuss the need for the issue of instructions to all the police stations to take impartial action irrespective of political consideration whenever complaints are brought to police stations". There is no insinuation in it. It is in perfect order.

2. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய தீர்மானமும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு காவல் துறை பற்றிய இந்த மானிய விவாதத்திற்குப் பயன்படும் பொருட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்காக ஆய்வுரை@ ஒன்று மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வுரையிலேயுள்ள விஷயங்களைப் பற்றியும், மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அரிய கருத்துக்களைப் பற்றியும் இன்றையதினம் பேச இருக்கின்றார்கள். நாளை மறுநாள் பதில் அளிக்கின்ற வாய்ப்பு எனக்கிருக்கின்ற காரணத்தினாலும், எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு விளக்கங்களைத் தருகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பேசுவதற்கு வழிவிட்டு இந்த அளவில் இந்த மானியத்தைப்பற்றி உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I thank you for having called me to initiate the discussion on this very important subject of Police administration.

@ 104-126-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.